செ.வெ.எண்: 73 நாள்: 27.01.2017

# புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வேளாண்மைத்துறையின் சார்பில் இன்று (27.01.2017) நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று துவக்கிவைத்து பேசியதாவது:-

விவசாயிகள் குறைகளை மனுக்களாக பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தீர்வுகாண விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் பிரதி மாதம் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் கிணறு ஆழப்படுத்துதல் கோரியும், உலர்களம் அமைக்க கோரியும், தென்னமாரி ஏரி மராமத்து செய்ய கோரியும் என வரப்பெற்ற 53 மனுக்கள் மீது விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் மழையளவைப் பொறுத்த அளவில் 2016ம் ஆண்டில் மொத்த மழையளவான 925.92 மி.மீக்கு மாறாக 495.37 மி.மீ அளவே மழை கிடைக்கப்பெற்றது. இது 53.5% குறைவாகும். நடப்பு ஜனவரி 2017ம் மாதத்தில் பெறப்பட வேண்டிய இயல்பான மழையளவான 6.68 மி.மீக்கு இதுவரையில் பெறப்பட்ட மழையளவு 35.40 மி.மீ ஆகும். நடப்பு 2017ம் ஆண்டில் இம்மாதம் முடிய பெற வேண்டிய இயல்பான மழையளவு 6.68 மி.மீக்கு இதுவரை பெறப்பட்ட மழையளவு 35.40 மி.மீ ஆகும்.

நடப்பாண்டு நெல் 68033 எக்டர் பரப்பளவிலும், சிறுதானியங்கள் 2861 எக்டர் பரப்பளவிலும், பயறுவகை பயிர்கள் 2693 எக்டர் பரப்பளவிலும், எண்ணெய்வித்துப் பயிர்கள் 6213 எக்டர் பரப்பளவிலும், கரும்பு 3059 எக்டர் பரப்பளவிலும், தென்னை 9386 எக்டர் பரப்பளவிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 33 வேளாண்மை விரிவாக்க மையங்களில் 228.220 மெ.டன் நெல் விதைகளும், 18.400 மெ.டன் பயறு விதைகளும், நிலக்கடலை 36.960 மெ.டன் தற்சமயம் இருப்பில் உள்ளது. விவசாயிகள் தரமான சான்று பெற்ற விதைகளை வேளாண்மை விரிவாக்க மையங்களிலிருந்து பெற்று சாகுபடி செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. உரிமம் பெற்ற கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை மையங்களிலும் சான்று பெற்ற விதைகள் கிடைக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு தேவையான தரமான உரங்கள் தடையின்றி உரிய நேரத்தில் கிடைக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது யூரியா 3411 மெ.டன்னும், டிஏபி 822 மெ.டன்னும், பொட்டாஷ் 1337 மெ.டன்னும், 2393 மெ.டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்து வரப்படுகிறது.

PPFM (Pink Pigmented Faculative Methylo Troph) எனப்படும் மெத்தைலோ பாக்டீரியா நுண்ணுயிரி தெளிப்பதால் இந்த பாக்டீரியா இலைகளில் உள்ள பச்சையத்தை தக்க வைக்கும் எனவே, ஒளிச்சேர்க்கை முறையாக நடந்து பயிர்கள் இயல்பாக உயிர் வாழும். மேலும், இலைகளில் நீராவிப் போக்கினை ஏற்படுத்தும் எத்திலினை கட்டுப்படுத்தி நீராவிப்போக்கினை தடுக்கும். ஒரு ஏக்கருக்கு 200 மில்லி பி.பி.எப்.எம். பாக்டீரியாவை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். ஒரு லிட்டர் திரவ வடிவிலான பாக்டீரியாவின் விலை ரூ.300/- ஆகும். ஒரு வாரம் தண்ணீர் ஒரு வாரம் இந்த பாக்டீரியா கரைசல் என மாறிமாறி தெளித்துப் பயன்பெற வேண்டும். இந்த பி.பி.எப்.எம். 100% இயற்கை சார்ந்த பாக்டீரியா மூலமாகவோ உருவாக்கப்பட்டிருப்பதால் எந்த எதிர் விளைவுகளும் ஏற்படாது.

இந்த பாக்டீரியா தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நுண்ணுயிர் துறை, வேளாண்மை அறிவியல் நிலையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களின் மூலம் பெற்று பயன்படுத்தலாம். தற்சமயம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் வேளாண்மை அறிவியல் நிலையம் வாயிலாக இலவசமாக பி.பி.எப்.எம். பெற்று விவசாயிகளுக்கு வழங்கி செயல் விளக்கங்களும் நடைபெற்று வருகிறது. செயல் விளக்கங்களில் திரளான விவசாயிகளும் உழவர் நண்பர்களும் பங்கேற்று வருகின்றனர்.

நமது மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் மழையை பயன்படுத்தியும் மற்றும் பாசன வசதியுள்ள இடங்களில் விவசாயிகள் குறைந்த வயது மற்றும் குறைந்த நீர்த்தேவையுள்ள உளுந்து மற்றும் மக்காச்சோளப் பயிர்களை மாற்றுப் பயிர்களாக அதிகஅளவில் சாகுபடி செய்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் பயறுவகைப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தில் மகசூல் காரணிகளை அதிகரிக்கும் பயறு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி 170 எக்டர் பரப்பளவில் செயல்விளக்கங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டு செயல்விளக்கத்திற்குத் தேவையான உளுந்து விதைகள், நுண்ணுயிர் உரங்கள், 2 சதவீத டி.ஏ.பி கரைசல் தெளித்தல் போன்றவை எக்டர் ஒன்றுக்கு ரூ.5000/- மானிய மதிப்பில் வழங்கப்பட்டு வருகிறது.

பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் நடப்பு சம்பா பருவத்தில் நெல்பயிரில் சுமார் 1.66 இலட்சம் ஏக்கர் பரப்பளவும், இதர ரபி பருவ பயிர்களான பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், கரும்பு ஆகியவற்றில் சுமார் 4390 ஏக்கர் பரப்பளவும் பயிர்காப்பீடு செய்யப்பட்டுள்ளது. நடப்பு 2016-17ஆம் ஆண்டு சம்பா நெல் பயிருக்கு 2800 எண்களும், இதர ரபி பருவ பயிர்களுக்கு 1968 எண்களும் பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ள மாவட்டத்திற்கு இலக்கீடு பெறப்பட்டு தற்சமயம் பயிர் அறுவடை பரிசோதனை பணிகள் வேளாண்மைத்துறை வாயிலாக புள்ளியல் துறை மற்றும் வருவாய்துறை இணைந்து நடைபெற்று வருகிறது. பயிர் அறுவடை பரிசோதனைகளை விரைந்து முடித்திட வேளாண்மைத்துறையில் பணியில் உள்ள உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் அட்மா பணியாளர்களை தவிர தொகுப்பூதிய முறையில் ஒப்பந்த அடிப்படையில் 52 தற்காலிக பணியாளர்களை மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ள அனைத்து பயிர்களுக்கும் அரசு வழிகாட்டுதலுக்குட்பட்டு பயிர் அறுவடை பரிசோதகைள் மேற்கொண்டு அரசுக்கு உரிய நேரத்தில் மகசூல் தொடர்பான விவரங்களை அளித்திட வேளாண்மைத்துறை வாயிலாக விரைவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பயிர் நிலை பாதிப்பு பகுதிகளை தமிழக அரசால் அமைக்கப்பட்ட மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் மற்றும் தமிழகஅரசின் ஆதிதிராவிடர் நலத்துறை அரசு முதன்மைச் செயலர் அவர்கள் அடங்கிய சிறப்புக்குழு 08.01.2017 அன்றும் மத்திய அரசின் வறட்சி மதிப்பீட்டுக்குழு 25.01.2017 அன்றும் பார்வையிட்ட நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் மாவட்டத்தில் நிலவும் வறட்சி நிலை குறித்து உரிய அறிக்கைகள் அளிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள 763 வருவாய் கிராமங்களிலும் வயல்வாரியான பயிர் பாதிப்பு கணக்கெடுப்புப்பணி வருவாய்த்துறை மற்றும் வேளாண்மைத்துறை அலுவலர்களால் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, வேளாண்மை இணை இயக்குநர் திரு.அண்ணாமலை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.சந்தோஷ்குமார், புதுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆ.ப., மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**